

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (10.02.2025) வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், 2024–2025–ஆம் ஆண்டில் பயிர் காப்பீட்டுத் திட்ட செயல்பாடு மற்றும் புயல் / மழை வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளான பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத் துறை அரசு செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், காப்பீட்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு

# பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை விரைவில் வழங்க நடவடிக்கை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, பிப்.11-

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (10.02.2025) வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில், கடந்த 2024 டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெஞ்சல் புயல் மற்றும் வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க காப்பீட்டு நிறுவனங்களை வலியுறுத்துதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

2024-2025 ஆம் ஆண்டில், இதுவரை மொத்தம் 32 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டு, சுமார் 14 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இதில் சம்பா / தாளடி / பிசானம் நெற்பயிரில் மட்டும் இதுவரை மொத்தம் 8 இலட்சம் விவசாயிகளை பதிவு செய்து 19 இலட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெஞ்சல் புயல், வடகிழக்கு பருவ மழை மற்றும் பருவம் தவறிய மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், செங்கல்பட்டு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், தென்காசி, திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சம்பா நெற்பயிர் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் திட்ட விதிமுறைகளின்படி பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தி இழப்பீட்டுத் தொகையை விரைவில் கணக்கீடு செய்து விவசாயிகளுக்கு வழங்க மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.

இதன்படி நடப்பு சம்பா பருவத்திற்கு 39,832 பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு, இதுவரை 22,868 பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. முதற்கட்டமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், பயிர் அறுவடை பரிசோதனைகள் முழுவதுமாக முடிந்த அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில், தகுதி வாய்ந்த கிராமங்களுக்கு 2025 பிப்ரவரி மாதம் இறுதி வாரத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் பிப்ரவரி மாத இறுதிக்குள் முடிவடையும் பயிர் அறுவடை பரிசோதனைகளுக்கும் வழக்கமாக ஜுன் மாதத்தில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை படிப்படியாக 2025 மார்ச் மாதத்திற்குள்ளாகவே விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கவும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, புள்ளியியல் மற்றும் பொருளியல் துறை ஆணையர் திருமதி ஆர்.ஜெயா, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் மண்டல மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

### தொகுதி நிதி ரூ.40 லட்சத்தில்

# பல்லவபுரத்தில் நியாய விலைக்கடை, காவல் உதவி மையம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

பல்லவபுரம், பிப். 11-

பல்லவபுரம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பம்மலில் ரூ.40 லட்சத்தில் நியாய விலை கடை, காவல் உதவி மையம், காரியமண்டபம் பல்லவபுரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி, தாம்பரம் மாநகராட்சி, 1வது மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நியாய விலை கடை, கழிவறை, காவல் உதவி மையம், காரியமண்டபம் அமைத்து தர வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் சார்பில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று தமது தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் தாம்பரம் மாநகராட்சி, 5வது வார்டு பகுதியில் ரூபாய் 12.50 லட்சம் மதிப்பீட்டில் நியாயவிலை கடை, கழிவறை வசதி உடன் கட்டிடம்.

10வது வார்டு பகுதியில் ரூபாய் 12.50 லட்சம் மதிப்பீட்டில் நியாயவிலை கடை, கழிவறை வசதி உடன் கட்டிடம்.

12வது வார்டு பகுதியில் ரூபாய் 3.80 லட்சம் மதிப்பீட்டில் காவல் உதவி மையம்.

6வது வார்டு பகுதியில் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் காரிய மண்டபம் கட்டிடம் அமைக்கும் பணிகள் நடைபெற்றது.

இந்நிலையில் பணிகள் அனைத்தும் நிறைவடைந்த நிலையில் அவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், இளநிலை பொறியாளர் அருணாச்சலம், பல்லாவரம் சரக கூட்டுறவுத் துறை சார்பதிவாளர் நிலோபர் நிஷா, மாமன்ற உறுப்பினர்கள் மதினா பேகம், கல்யாணி டில்லி, சத்யா மதியழகன் மாநகராட்சி மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### விடுமுறை நாளான இன்று

# ஆவணப் பதிவுகளை மேற்கொள்ள அனுமதி!

## பத்திரப் பதிவுத்துறை அறிவிப்பு!

சென்னை, பிப்.11-

பொதுமக்களின் நலன் கருதி அசையா சொத்து குறித்த ஆவணப்பதிவுகளை மங்களகரமான நாட்களில் மேற்கொள்ள பொது மக்கள் விரும்புவதால் பொது விடுமுறை நாளான 11.02.2025 செவ்வாய் கிழமை அன்று தைப்பூசம் நாளில் ஆவணப்பதிவுகள் மேற்கொள்ள அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே முந்தைய ஆண்டுகளை போலவே இவ்வாண்டும் ஆவணப்பதிவுகள் மேற்கொள்ள பதிவு அலுவலகங்களை காலை 10.00 மணி முதல் ஆவணப் பதிவு முடியும்வரை செயல்பாட்டில் வைத்திட அனைத்து பதிவு அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடும் விடுமுறை நாளில் மேற்கொள்ளப்படும் ஆவணப் பதிவுகளுக்கு விடுமுறை நாள் ஆவணப் பதிவிற்கான கட்டணம் சேர்த்து வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று பத்திரப்பதிவுத் துறை செய்தி வெளியிட்டுள்ளது.



பல்லாவரம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பம்மலில் 40 லட்சத்தில் நியாய விலைக் கடை, காவல் உதவி மையம், காரியமண்டபத்தை பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இதில் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் பிறந்த நாள் விழா!

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் ஏழை, எளியோர்களுக்கு நலஉதவிகள்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, பிப்.11-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக்கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் செயலாளர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

சென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர் ஆலோசனைக் கூட்டத்தில் ஆலோசனைக் கூட்டம் நேற்று (10.02.2025 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7 செல்லப்பா தெரு என்ற முகவரியில் மாவட்ட அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினுடைய செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் ஆர்.பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், ஜி.எம்.தேவன், பி.கே.மூர்த்தி எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, பி.பி ஸ்ரீராமுலு சரிதாமகேஷ் குமார் எம்.சி. ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எஸ் முரளி எஸ் ராஜசேகர் வே. வாசு, எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வந்தன், எம்.டி. ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.. ராஜகோபால், வானவில் விஜய், எல்.பி.எப்.மோகன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஷ்வரிஸ்ரீதர் எம்.சி, துரைகண்ணன், எம். பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, மா.அசோக்குமார், இரா வீரமணி, கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், பி.விஜயகுமார், பா.பிரதீப் குமார், எல்.சம்பத் குமார், ஆர்.எஸ்.சித்திக், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின் வருமாறு:

**தீர்மானம்–1**

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர் துறைமுகம் எழும்பூர், திரு.வி.க நகர், வில்லிவாக்கம், அம்பத்தூர் தொகுதிகளில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பி.எல்.ஏ.2, பி.எல்.சி கூட்டங்களை நடத்தி 2026 தேர்தலுக்கான வழிமுறைகளை ஆலோசனைகளாக வழங்கிட அறிவுறுத்தப்பட்டது.

**தீர்மானம்–2**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை சீரும் சிறப்புமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் நலன் பெறுகின்ற நலத்திட்டங்களை வழங்கி கொண்டாடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

### முதல்வர் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை 12-02-2025 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் குன்றத்தூர் - மாங்காடு சாலையில் அமைந்துள்ள கார்த்திக் பேலஸ் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ. விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் - மாநகர - பகுதி - ஒன்றிய - பேரூர் கழகச் செயலாளர்கள் கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள் - மாவட்ட துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழ்நாடு முதலமைச்சர் -
கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை
சிறப்பாக கொண்டாடுவது குறித்து.
கழக வளர்ச்சிப் பணி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர்- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி. சேகர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு முதல் பரிசு ரூ.2,00,000 மற்றும் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி, கிரிக்கெட் அணிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை, பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்.